பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 12 2025 12 40
புதன்கிழமை நண்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் உள்ள தங்கக் கோவிலில் இன்று தரிசனம் செய்தார்.
- பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு, எத்தியோப்பியா நாட்டின் உயரிய விருதான "The Great Honour Nishan of Ethiopia" வழங்கி கவுரவிக்கப்பட்டதற்கு, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- ரயில்வே பயணியர் பாதுகாப்பை வலுப்படுத்த கவாச் விரிவாக்கம் செய்யும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- நாட்டில் நிலக்கரி உற்பத்தி கடந்த நிதியாண்டில் முதன்முறையாக ஒரு பில்லியன் டன் என்ற அளவை எட்டி சாதனை படைத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.
- இந்தியா-தென்னாப்பிரிக்கா இடையேயான நான்காவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று லக்னோவில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அரசுமுறைப் பயணமாக இந்து வேலூர் வந்தடைந்துள்ளார்.

அரியூர் நாராயண பீடத்தில் உள்ள ஸ்ரீபுரம் தங்கக்கோவிலுக்கு சென்ற குடியரசுத் தலைவர் அங்கு சாமி தரிசனம் செய்தார்.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், மாநில கைத்தறித் துறை அமைச்சர் திரு ஆர் காந்தி ஆகியோர் குடியரசுத் தலைவரை வரவேற்றனர்.

கோவிலில் குடியரசுத் தலைவருக்கு முறைப்படியான மரியாதை வழங்கப்பட்டது.

கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியான மண்டபத்தை குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார்.

தமது வேலூர் பயணத்தை முடித்துக் கொண்டு திருமதி திரௌபதி முர்மு திருப்பதி செல்கிறார்.

>>><><><><<<

பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு, எத்தியோப்பியா நாட்டின் உயரிய விருதான "The Great Honour Nishan of Ethiopia" வழங்கி கவுரவிக்கப்பட்டதற்கு, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

எத்தியோப்பியாவின் உயரிய விருது பெற்ற பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அவரின் உலகளாவிய பொருளாதார அரசியல் செயல்பாட்டிற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதை இந்த விருது உறுதி செய்திருப்பதாக கூறினார்.

ஒவ்வொரு இந்தியரின் கவுரவத்தையும் உள்ளடக்கியதாக இது உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பி.ஜே.பி. தலைவரும், மத்திய அமைச்சருமான திரு.ஜெ.பி.நட்டா விடுத்துள்ள செய்தியில், இந்த விருது 140 கோடி இந்திய மக்களுக்கும் பெருமை சேர்த்துள்ளதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின் மீது, உலக நாடுகள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில், 28-வது சர்வதேச கவுரவம் கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விருது, அவரது சிறந்த அரசியல் அணுகுமுறைக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய – எத்தியோப்பிய நட்புறவில், இந்த கவுரவம் ஒரு மைல் கல்லாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

>>><><><><<<

ரயில்வே பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இரண்டாயிரம் கிலோமீட்டர் தூர இருப்புப் பாதைகளுக்கு கவாச் பாதுகாப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதைத் தெரிவித்த அமைச்சர், ரயில்களை கட்டுப்படுத்தும் தானியங்கி அமைப்பு கவாச்சில் உள்ளதாகவும் கூறினார்.

பயணியர் ரயில்களில் கூடுதல் பாதை பாதுகாப்பை இந்த கட்டமைப்பு உறுதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

4 ஆயிரத்து 154 ரயில் எஞ்சின்களில் கவாச் அமைப்பு பொருத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ரயில்வேயில் உள்ள 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப பணியாளர்களுக்கு கவாச் கட்டமைப்பை பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>><><><><<<

நாட்டில் நிலக்கரி உற்பத்தி கடந்த நிதியாண்டில் முதன்முறையாக ஒரு பில்லியன் டன் என்ற அளவை எட்டி சாதனை படைத்துள்ளதாக நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தில் இதைத் தெரிவித்த அமைச்சர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நிலக்கரி உற்பத்தித் துறையில் முக்கிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளதாக கூறினார்.

அனைத்துத் துறைகளுக்கும் தடையற்ற நிலக்கரி விநியோகம் உறுதி செய்யப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் இரண்டாவது பெரிய நிலக்கரி உற்பத்தி நாடாகவும், அதிகளவில் நிலக்கரி உபயோகிக்கும் நாடாகவும் இந்தியா இருந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

தற்போது இருப்பில் உள்ள நிலக்கரி வரும் 7 ஆண்டுகளுக்கு நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு உள்ளதாகவும் திரு கிஷன் ரெட்டி குறிப்பிட்டார்.

>>><><><><<<

*இந்திய கடற்படையின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இரண்டாவது எம்.ஹெச் 60R Seehawk ரக ஹெலிகாப்டர் படைப்பிரிவு இன்று இணைக்கப்படவுள்ளது.*

*கடற்படை தலைமை தளபதி அட்மிரல் திரு தினேஷ் திரிபாதி கோவாவில் உள்ள ஐ என் எஸ் ஹன்சா கடற்படை தளத்தில் இன்று பிற்பகல் புதிய ஹெலிகாப்டர் படைப்பிரிவை தொடங்கிவைக்கிறார்.*

*இந்த நவீன ரக எம்.ஹெச் 60R Seehawk ஹெலிகாப்டரில் நவீன சென்சார்கள் நீர்மூழ்கி தாக்குதலை தடுப்பதற்கான கண்காணிப்பு கருவிகள் திறன்மிக்க ஆயுதங்கள் இடம்பெற்றுள்ளன.*

*நாட்டின் கடற்படையின் விமானப்பிரிவுக்கு வலுசேர்க்கும் வகையில் இது அமைந்துள்ளதாக எமது கோவா செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>><><><><<<*

*பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று எத்தியோப்பியா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.*

*Adis ababa வில் இன்று தமது பயணத்தை முடித்துக் கொண்டு ஓமான் தலைநகர் mascut செல்கிறார்.*

*இருநாடுகளுக்கும் இடையே 70 ஆண்டுகளுக்கும் மேல் தூதரக உறவுகள் நீடித்து வரும் நிலையில் இந்த பயணம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.*

*பிரதமரின் பயணம் குறித்து mascut இல் உள்ள இந்தியா தூதர் திரு ஜி வி ஸ்ரீனிவாஸ் எமது செய்தியாளரிடம் பேசுகையில் இரு நாடுகளும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் விரும்பும் நாடுகள் என்றும் அனைத்து மதங்களுக்கும் அங்கீகாரம் அளிப்பதாகவும் கூறினார்.*

*தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்பதில் இரு நாடுகளும் ஒருமித்த கொள்கையுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

இந்நிலையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் மஸ்கட் வருகை மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஓமான் அரசரை சந்தித்து இரு தரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தும் பிரதமர், ஓமனில் உள்ள இந்தியா வம்சாவளியினரையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் திரு ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

>>><><><><<<

பூடானின் தேசிய தினத்தையொட்டி, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருக்கு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், பூடானின் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை இந்தியா செய்யும் என்றும், தனித்துவமிக்க, சிறப்பான நட்புறவை, இரு நாடுகளும் தொடர்ந்து பராமரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

>>><><><><<<

போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கு மாநிலங்களில் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் புலனாய்வுத் தகவல்களை மத்திய போதைப்பொருள் தடுப்பு அமைப்புடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அதன் தலைமை இயக்குநர் திரு அனுராக் Garg கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநிலங்களில் உள்ள ஊடகங்கள் போதைப்பொருள் தொடர்பாக வெளியிடும் தகவல்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்பு மற்றும் அதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே விரிவான அளவில் மேற்கொள்ள உதவிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புலனாய்வை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்றும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி விரைந்து தண்டனை பெற்றுத் தரவேண்டும் என்றும் திரு திரு அனுராக் Garg கூறினார்.

>>><><><><<<

நாட்டில் அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு, வீட்டுவசதி உள்ளிட்ட கட்டமைப்புத் திட்டங்களை, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில், HUDCO நிறுவனத்தின் ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், வீட்டுவசதித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான நீண்டகால நிதியுதவியை உறுதி செய்வதிலும், ஹட்கோவின் பங்களிப்பை சுட்டிக்காட்டினார்.

நகரங்கள் விரிவடைந்து வருவதால், நகர்ப்புறங்களின் தேவையும் அதிகரித்து வருவதாகக் கூறிய திரு.மனோகர் லால், எதிர்காலத்திற்கேற்ற கட்டமைப்புத் திட்டங்களுக்கான நிதியுதவி முறைகளை வகுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

>>><><><><<<

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

வரும் வெள்ளிக்கிழமை வரை 3 நாள் நடைபெறும் இம்மாநாட்டிற்கு உலக சுகாதார அமைப்பும், மத்திய ஆயுஷ் அமைச்சகமும் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

>>><><><><<<

வந்தே பாரத் ரயில்கள் மூலம் இதுவரை ஏழரை கோடிக்கும் அதிகமானோர் பயணம் செய்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2019ஆம் ஆண்டு வந்தே பாரத் ரயில் சேவை தொடங்கப்பட்டதில் இருந்து 164 ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

நாட்டின் கலாச்சார, ஆன்மிக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த 274 மாவட்டங்களை இணைக்கும் வகையில் இந்த ரயில் சேவை நடைபெறுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>><><><><<<

ஜம்மு கஷ்மீரில் ஐந்து வயதிற்குட்பட்ட 19 லட்சம் குழந்தைகளுக்கு வரும் ஞாயிற்றுக்கிழமை போலியோ சொட்டு மருந்து அளிக்கப்படவுள்ளது.

தேசிய போலியோ சொட்டு மருந்து வழங்கும் இயக்கத்தின் கீழ், இம்மாதம் 23, 24 ஆம் தேதிகளில் வீடுவீடாக சென்று சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து அளிக்கவுள்ளனர்.

ஜம்மு கஷ்மீரில் 10 ஆயிரத்து 993 சிறப்பு முகாம்கள் மூலமாகவும் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

>>><><><><<<

## விளையாட்டுச் செய்திகள்

இந்தியா-தென்னாப்பிரிக்கா இடையேயான நான்காவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று லக்னோவில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இந்தியா இரண்டுக்கு ஒன்று என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தப்போட்டியில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்புடன் இந்தியா களம் இறங்கும் என்று கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

>>><><><><<<